பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 21 ஞாயிற்றுக்கிழமை 08.10.2023 கதிர் 331

## இது ரகசியம் அல்ல!

சீனாவின் ஷியாங் ஜான் 06 கப்பல் இலங்கைக்கு வருமா வராதா என்றால் வராது ஆனால் வரும் என்பதுதான் இன்று வரையில் பதில். இந்தக் கேள்விக்கு அமெரிக்காவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளிக்கையில் அமெரிக்கா, இந்தியா, சீனா நாடுகளின் அழுத்தங்களையெல்லாம் பார்ததுப் பார்த்து எமக்குப் பழகிப்போய்விட்டது, இனி இதை வைத்துப் பூச்சாண்டி காட்டிக்கொண்டிருக்காதீர்கள் என்கிற வகையில் கருத்துத் தெரிவித்தார். ஆனால், அதே காலப் பகுதியில் இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி அந்தக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றார்.

இந்தநிலையில் அந்தக் கப்பலுடன் கூடிஆய்வுகளைமேற்கொள்ளவிருந்த பேராதனைப் பல்கலைக்ககழகம் அந்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்தது. ☞ 2

பொலிஸ் அதிகாரம் இல்லாத மாகாண சபைகளுடன்

# அடுத்த வருடம் அதிகார பகிர்வு

ஜனாதிபதி நேற்று மட்டக்களப்பில் தெரிவிப்பு

மனித உரிமை மீறல்களையும் நாட்டுக்குள்ளேயே தீர்க்கலாமாம்



இனமற்றும்மதப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதால், விரைவில் அதற்குரிய தீர்வுகளை காண்பதற்காக அனைத்து தலைவர்களுடனும் பேச்சு நடத்தவிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு பூர்த்தி விழா நிகழ்வில் நேற்று பிரதம அதிதியாக கலந்து கொண்டு ☞ 2

## மலேசிய அமைச்சர் கொழும்புக்கு வருகை

மலேசிய அயலுறவுத்துறை அமைச்சர் சம்ப்ரி அப்துல் காதிர் உத்தியோகபூர்வப் பயணமாக இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

நாளை திங்கட்கிழமை 9 ஆம் திகதி கொழும்பில் தொடங்கவுள்ள இந்து சமுத்திர வலய நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொள்ளவதற்காகவே அவர் வருகை தருகிறார்.

இவ்வாறு வருகை தரும் மலேசிய வெளிவிவகார அமைச்சருடன் அந்நாட்டின் உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவும் நாட்டிற்கு வருகை தரவுள்ளது.

ஒக்டோபர் 12 வரை ☞ 2

## தெற்கில் கொட்டும் கன மழை 13,027 குடும்பங்கள் பாதிப்பு

நாட்டில்பெய்துவரும் கடும் மழையினால் 12 மாவட்டங்களில், 13,027 குடும்பங்களை சேர்ந்த 53,399 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்; 6 பேர்உயிரிழந்துள்ளனர்; 20பேர் காயமடைந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது: மேல் மாகாணம் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 10,373 குடும்பங்களைச் சேர்ந்த 42,682 பேர் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

தென் மாகாணத்தில் 2,119 குடும்பங்களைச் சேர்ந்த 8,615 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், வடமேல் மாகாணத்தில் 146 குடும்பங்களை சேர்ந்த 1,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில், 381 கும்பங்களை சேர்ந்த 1,556 பேர் ☞ 8

## திடீர் மின்னல் தாக்கி ஒலுவிலில் ஒருவர் சாவு

மேலும் மூவருக்குப் படுகாயங்கள்

(கே எ ஹமீட்)

ஒலுவில் வெளிச்ச வீட்டுக்கு அருகில் நேற்று மின்னல் தாக்கி ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் மூவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

திடீரென ஏற்பட்ட காலநிலை மாற்றத்தைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணியவில் மின்னல் தாக்கியது. ஒலுவில் வெளிச்ச

வீட்டுக்கு அருகில் வீச்சு வலை மூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்த 4 பேர் இதனால் பாதிக்கப்பட்டனர்.

ஒலுவில் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த சுபைதீன் நிஜாமுதீன் (வயது 34) என்பவர் மின்னல் தாக்கிய இடத்திலேயே உயிரிழந்தார். இவர் நான்கு

பிள்ளைகளின் தந்தை ஆவார். ☞ 2

## தமிழர்களை விரட்டும் சதியை முறியடிக்க அணி திரளுங்கள்

மட்டக்களப்பில் சுகாஸ் அழைப்பு

தமிழர்களைதாயகத்திலிருந்து விரட்டுவதற்கான சதிமுயற்சியை தோற்கடிப்பதற்கு அனைவரும் அணிதிரளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் கனரட்ணம் சுகாஸ் அறைகூவல் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று ஊடகங்களிடத்தில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்புமயிலத்தமடு மாதவனை எல்லைக் கிராமத்திலிருந்து 990 தமிழ் அப்பாவிப் பண்ணையாளர்கள் சிங்கள மக்களால் ☞ 8

## இது வெறும் பண்ணையாளர் பிரச்சினையல்ல பூர்வீக நிலங்களை பாதுகாப்பதற்கான முயற்சி

அனைவரும் திரண்டு வாருங்கள் என்கிறார் சாணக்கியன்

பண்ணையாளர்களின் விடயத்தினை வெறுமனேபண்ணையாளர்களின் நிலப் பிரச்சினையாகப் பார்க்காது பூர்வீகமான நிலங்களை பாதுகாத்து, எதிர்கால சந்ததியை உறுதிப்படுத்துவதற்காக அனைவரும் இன்றையதினம் அணிதிரள வேண்டுமெனஇலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன்கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று மாலை செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டஅவர்,மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பில் ☞ 8

## ஒக்டோபர் 24 ஆசிரியர்கள் கொழும்பில் போராட்டம்

அதிபர்ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை கோரி ஒக்டோபர் 24 கொழும்பிலுள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாகப் போராட்டம் நடத்தவுள்ளதாக ஆசிரியர் சேவைச்சங்கம்அறிவித்துள்ளது. இந்தப் போராட்டத்தில்அனைத்து ஆசிரியர் மற்றும் அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ஜெயராஜசிங்கம் கோல்வின் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஜேவிபிகட்சியின் அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள நிலுவை தீர்க்கப்படாமல் உள்ளதால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கெடுத்து வருகின்றனர்.

சம்பள நிலுவை தொடர்பில் ஆட்சியாளர்களுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சு நடத்தியபோதும்இதுவரை தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

கடந்த வருடம் ஆசிரியர்களின்சம்பளநிலுவை கோரி கொழும்பில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டநிலையில் ஆசிரியர்களின் சில கோரிக்கைகளை மட்டும் இந்த ஆட்சி நிறைவேற்றியது.

ஆனால், அதிபர் ஆசிரியர்களின் ஏனைய நிலுவைகள் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் ☞ 8

## போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை

மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்கள் முன்னெடுக்கும் போராட்டம், மற்றும் திட்டமிட்டுள்ள கவனயீர்ப்பு பேரணிகள் உள்ளிட்டவற்றுக்கு ஏறாவூர் நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

சித்தாண்டி மாட்டுப் பண்ணையாளர் அமைப்பின் தலைவர் சின்னத்தம்பி விமலன், செயலாளர் குழந்தைவேல் பொன்னுத்துரை, பொருளாளர் பசுபதி கோவிந்தராசா, ஆகியோருக்கும் அவர்களுக்கு உதவிகளை வழங்குவோருக்கும் எதிராக இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்திவெளி பொலிஸ் நிலையபிரதானபொலிஸ் கண்காணிப்பாளரால் (இன்ஸ்பெக்டர்) தடையுத்தரவுகோரிமுன்வைக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ள ☞ 2

## பொதுத்தேர்தல் மறுசீரமைப்புக்கான திருத்த வரைவு அமைச்சரவையில்

நாடாளுமன்றத் தேர்தல் மறுசீரமைப்புக்கான அரசமைப்பு திருத்த வரைவு அமைச்சரவையின் அனுமதிக்காகவிசேடஅமைச்சரவை பத்திரம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆளும் தரப்பின் சார்பில் நீதி மற்றும் அரசமைப்புமறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ வினால் இந்த அமைச்சரவைப் பத்திரம் முன்நகர்த்தப்பட்டுள்ளது.

உத்தேசஅரசமைப்பு திருத்தத்தின்படி, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 160 பேர் தொகுதிவாரியாக மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எஞ்சிய 65 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தேசிய அல்லது மாகாண மட்டத்தில்விகிதாசார அடிப்படையில்தெரிவுசெய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டுமென அமைச்சரவைப் ☞ 8

## இன, மத வாதத்தை உருவாக்க செயற்படுகிறார் சாணக்கியன்

அப்பிட்டிய சுமண ரத்ன தேரர் தெரிவிப்பு

மட்டக்களப்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், அப்பாவிப் பண்ணையாளர்களை வாழவைப்பதாகக்கூறிச் சிங்கள மக்கள் உயிர் நீத்தாலும்பரவாயில்லை என்ற கோணத்தில்தான் இனவாதத்தினையும், மதவாதத்தினையும் தோற்றுவித்துச் செயற்படுகின்றார் என்று அம்பிட்டி சுமனரத்ன தேரர் குற்றஞ்சாட்டினார்.

மட்டக்களப்பில் நேற்றுபோராட்டமொன்றை தலைமை ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

ஆய்வு ஈடுபடவிருந்த ஒரு பேராசிரியர் நாட்டை விட்டு வெளியேறி விட்டார் என்றும் மற்றொருவர் பதவியிலிருந்து வெளியேறிவிட்டார் என்றும் தெரிவித்த பல்கலைக்கழகம் இதனால் ஆய்வுகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் சீனக் கப்பல் இனி இலங்கைக்கு வராது என்கிற வகையில் செய்திகளும் கதைகளும் உலாவத் தொடங்கின.

ஆனால், அந்தக் கப்பல் திட்டமிட்டபடி இலங்கைக்கு வரும் என்றுதான் தெரிகின்றது. அந்தக் கப்பல் இலங்கைக்கு வரும்போது அதனைவரவேற்பதற்கானதொடக்க நிகழ்வுக்கான அழைப்பிதழ்களை சீனத்தூதரகம்வழங்கிவருகின்றது. திட்டமிட்ட திகதியில் கப்பலை கொண்டு வருவதில் சீனா உறுதியாகவே இருந்துவருகின்றது என்பது இந்த அழைப்பிதழ் விநியோகத்தின்மூலம்தெரிகின்றது.

சீனாவில் இருந்து கப்பல் புறப்பட்டு இந்தியாவின் கிழக்கு திசையில் கடலில் ஒரு மாதம் ஆய்வு செய்து. அதனை நிறைவு செய்துதற்போது உணவு, தண்ணீர் ளிபொருளுக்காகஇலங்கைநோக்கி வந்து கொண்டிருக்கின்றது.

இலங்கையில் நடக்கவுள்ள ஆய்வுகளின் பின் மீண்டும் இந்தியாவின் மத்திய பகுதியிலும் இந்தக் கப்பல் கடலில் ஆய்வில் ஈடுபடவுள்ளது.

இலங்கையின் கடலில் நீர் நிலை ஆய்வு மற்றும்

கடலின்அடியிலானஆய்வுகளில் இக் கப்பல் ஈடுபடவுள்ளது.

நீர் நிலை ஆய்வு என்பது எங்குமே சமாதானம் கொண்ட ஆய்வாகவே காணப்படும்

அடிப்படுக்கை ஆய்வு என்பதே பெரும் விளைவுகளையும் ஏற்படுத்தும் விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

ஒக்டோபர் 25 இலங்கை வருவதற்காக அனுமதி கோரப்பட்டபோதும்நவம்பர்25ஆம் திகதிவருமாறுஇலங்கைகோரிக்கை விடுத்திருப்பதாகத்தெரிவிக்கப்பட்டது. இதற்கு மத்தியிலும் ஒக்டோபர் 25 கப்பலில் இலங்கை ஆய்வாளர்கள் அல்லது விஞ்ஞானிகள் நால்வரை ஏற்றிக் கொண்டு கடல் ஆய்வில் 10 நாள் ஆய்வில் ஈடுபட்ட பின்பு மீண்டும் துறைமுகம் வந்து ஏற்றிய இலங்கையரை இறக்கிய பின்பு கப்பல் இலங்கையில் இருந்து வெளியேறும்.

இலங்கை விஞ்ஞானகளை இறக்கிய பின்பு நாட்டில் இருந்து செல்லும்போதும் கப்பல் ஆய்வில் ஈடுபட்டவாறே செல்லும்.

இவ்வாறு இடம்பெறவுள்ள ஆய்வின் தொடக்க நிகழ்வில் கலந்துகொள்ளுமாறுசீனாவின்தென் சீனக் கடல் ஆய்வு நிறுவனம், சீன அறவியல்அக்கடமிகடிததலைப்பில் அதிகாரிகள் விருந்தாளிகளுக்கு அழைப்பிதழ்களை வழங்கி வருகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோதே ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கமேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரிக்கு வருகைத் தந்த ஜனாதிபதி மாணவர்களுடன் சுமூகமாக கலந்துரையாடினார். அதனையடுத்து பாடசாலை மாணவர்களால் தேசிய கீதம் தமிழ், சிங்கள மொழிகளில் இசைக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் அனைத்துத் தலைவர்களுடனும் பேச்சு நடத்தவே எதிர்பார்க்கின்றேன். இன, மத பிரச்சினைகளை நாம் தீர்க்கவேண்டும். இந்த விடயங்களால் எப்போதும் மோதல்களை உருவாக முடியாது. இந்தப் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவோம். மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கும் அர்ப்பணிப்புடன் இருக்கின்றேன்.

பொலிஸ் அதிகாரங்களை ஒருபுறம் வைத்துவிட்டு ஏனைய விடயங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். நான்கல்விஅமைச்சராக இருந்தபோது நாட்டில் ஒன்பதாயிரம் பாடசாலைகள் காணப்பட்டன. அவற்றை என்னால் நிர்வாகம் செய்ய முடியாது போனது. ஒன்பதாயிரம் பாடசாலைகளையும் மாகாண நிர்வாகத்திற்கு வழங்க வேண்டியுள்ளது. மாகாண சபைகளையும், ஒழுக்கத்தையும் பேணுவது மத்திய ஆட்சியின் செயற்பாடாகும்.

சுற்றுலாத்துறையை எடுத்துக்கொண்டால் அதனை சுற்றுலா சபையினால் முகாமை செய்ய முடியாது. மேல் மாகாண சுற்றுலாத்துறைக்கும் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறைக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவேமாகாண சபைகளுக்கான சுற்றுலா சபைகள் மூலம் செயற்படவேண்டும்.

விவசாயத்துறை, சுகாதாரத்துறை, ஆகியவற்றிலும் கவனம் செலுத்தவேண்டும். அடுத்த ஆண்டாகின்றபோது அதிகாரங்களைப் பகிர்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றிருந்தால் அதனை நாம் நாட்டுக்குள்ளேயே தீர்த்துக்கொள்வோம். வெளியே செல்லவேண்டிய அவசியமில்லை. சர்வதேசத்திற்குச் சென்று அதனை தீர்த்துக்கொள்ள முடியும் என்று நான் நம்பவில்லை. தரத்தினை உறுதி செய்து அத்தரத்தினை தொடர்ந்தும் பேணிக்கொண்டு செல்ல வேண்டும் - என்றார்.

இதேவேளை, ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் அவருடைய உரை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய கீதத்தில் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்று கூறப்படுவதால் அதனை சிங்களத்தில்இசைத்தாலும்தமிழில் இசைத்தாலும் பிரச்சினைகள் இல்லை. அனைவரும் ஒன்றுபட்டு ஒரே தேசமாக முன்னோக்கிச்செல்ல வேண்டியது அவசியமாகும்.

வேறுபாடுகளை முன் நிறுத்தி மோதல்களை ஏற்படுத்திக் கொண்டதால் நாடு என்ற வகையில் இலங்கை சரிவைச் சந்திக்க நேரிட்டது. அரசியல் ரீதியான வேறுபாடுகளும் இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளன.

நாட்டின் பொருளாதாரம் முழுமையாகச் சரிவடைந்ததால் கடந்த வருடத்தில் நாட்டு மக்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தனர். அனைத்து வேறுபாடுகளையும் விடுத்து நாட்டுக்காக அனைவரும் ஒன்றுபட்டுப்பயணிக்கவேண்டியது அவசியமாகும்.

உள்நாட்டுப் பிரச்சினைகளை நாட்டுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதற்காக சர்வதேசத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான எஸ். வியாழேந்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருடன் மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரியின் அதிபர் எண்டன் பெனடிக் உட்பட பாடசாலையின் ஆசிரியர் குழாம், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## மலேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தங்கியிருக்கவுள்ள அக்குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தனமற்றும்வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

## போராட்டத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தால் மேற்படி உத்தரவிரைன பிறப்பித்துள்ளதாக நீதிவான் நீதிமன்றம் தனது கட்டளையில் அறிவித்துள்ளது.

அக்கட்டளையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இத்தடையுத்தரவானது மயிலத்தமடுகால்நடைவளர்ப்பாளர் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் அவர்களுக்கு உதவக்கூடியவர்கள் ஆகியோர் மூலம் ஆர்ப்பாட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு இடையூறு விளைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதற்கான விடயம் அவதானிக்கப்படுகிறது.

அதன்பிரகாரம்பொலிஸாரினால் முன்வைக்கப்பட்டகாரணங்களைப் பரிசீலனை செய்துள்ள மன்று குற்றவியல் நடைமுறைக்கோவை 106(01) பிரகாரம் கட்டளையைப் பிறப்பிக்கின்றது.

அதனடிப்படையில், ஆர்ப்பாட்டத்தை ஏற்படுத்தக் கூடியவர்களால் உங்களுடன் சேர்ந்து தனிநபர், குழுக்களாக ஒன்றுகூடி 2023.10.07 மற்றும் 2023.10.08ஆம் திகதிகளில் சந்திவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சித்தாண்டி முருகன் கோவில் முன்னால் உள்ள வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாகவோ அல்லது பொதுமக்கள் பிரயாணிகள், அம்புலன்ஸ் வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்காது சேதம் ஏற்படுத்துவதையோ பொதுமக்கள் கோவம்கொள்ளும்அளவில்செய்ய வேண்டாம் என்றுள்ளது.

இந்த நிலையிலேயே சித்தாண்டியில் தொடர்ச்சியாக 23ஆவது நாளாக போராடிக் கொண்டிருக்கும் பண்டையாளர்களின் போராட்டப்பகுதிக்கு நேற்றுச் சென்ற பொலிஸார் மேற்படி நீதிமன்ற கட்டளையை வாசித்துக்காண்பித்து அப்பகுதியில் ஒட்டியுள்ளனர்.

## திடீர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒலுவில் ஏழாம் பிரிவைச் சேர்ந்தவர்களான இல்முடீன் (வயது 32), ஒலுவில் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த எஸ். எம் அஹமட் (வயது 50) ஒலுவில் நான்காம் பிரிவைச் சேர்ந்த கே.அஸ்மின் (வயது 36)

ஆகியோர் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தனர். ஒலுவில் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

## இன, மத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கிநடத்தியஅவர்ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் காலை 9.30இலிருந்து மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில்தான் காத்திருந்தோம். இப்போதுமாலை5மணியாகின்றது. நாங்கள் காலையிலிருந்து தற்போது வரையில் தண்ணீர்கூடப் பருகவில்லை. உணவு அருந்தவில்லை. அதற்கு என்ன காரணம் என்று எங்களிடத்தில் நீங்கள் கேட்கலாம்.

மட்டக்களப்பில் சாணக்கியன் இராசமாணிக்கம்என்றநாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளார். அவர் புலம்பெயர்ந்தவர்களிடத்தில் பணத்தைப் பெறுவதற்காகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரபல்யத்துக்காகவும் நாடாளுமன்றத்தில் பதாகையை ஏந்திக்கொண்டு தூங்குகின்றார்.

அவருடைய கோரிக்கை என்னவென்றால் திவுலப்பத்தான என்ற பகுதியில் உள்ள அப்பாவி சிங்கள மக்களை வெளியேற்றி பண்ணையாளர்களுக்கு அந்த இடத்தினை வழங்கவேண்டும் என்பதுதான். அவரைப் பொறுத்தவரையில் அப்பாவிப் பண்ணையாளர்களை வாழவைப்பதாகக் கூறிச் சிங்கள மக்கள் உயிர்நீத்தாலும் பரவாயில்லை என்ற கோணத்தில்தான் இனவாதத்தினையும், மதவாத்தினையும் தோற்றுவித்துச் செயற்படுகின்றார்.

ஓர் உண்மையை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். நானோ என்னுடன் வந்திருப்பவாகளோ மட்டக்களப்பில் நிலத்தைக் கோரவில்லை. பொதுவிலில் ஏறாவூரில், திருகோணமலையில் நிலங்களைக் கோரவில்லை. நாம் அப்பாவி சிங்கள மக்களுக்கான திவுலப்பத்தான இடங்களை வழங்குமாறே கோருகின்றோம். அந்த திவுலப்பத்தான பகுதியானது அரனகங்விலவுக்குச் சொந்தமானதாகும். அந்த நியாயமான கோரிக்கையை மனு மூலம் ஜனாதிபதியிடத்தில் கையளிக்கவே வருகை தந்துள்ளோம்.

ஆனால் சாணக்கியன் இராசமாணிக்கம், அப்பாவி பண்ணையாளர்களை போராட்டம் நடத்துமாறு கோரி அதன் மூலம் இனவாதத்தினை தோற்றுவித்து அதனைபுலம்பெயர்ந்தவர்களிடத்தில் காண்பித்து பணத்தைப் பெற்றுக்கொண்டு சுகபோக வாழ்க்கையை வழ்கின்றார்.

இந்த உண்மையை அப்பாவி தமிழ் பண்ணையாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இங்கே, சிங்கள மக்களையும், எம்மையும், அப்பாவி தமிழ் மக்களுடன் மோதச் செய்துவிட்டு, மீண்டும் இந்தநாட்டில் இனவாதத்தை தோற்றுவித்து



காலைக்கதிர் Kalaikkathir

# சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சஜித் தலைமையில் விசேட குழு நியமனம்

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவும், சுகாதாரத் துறையுடன் தொடர்பான பல்வேறு நிறுவனங்களில் அவருக்கு நெருக்கமானவர்களும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் மோசடியான கொடுக்கல் வாங்கல் உட்பட தற்போது சுகாதாரத்துறை எதிர்நோக்கும்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரச் சீர்கேடு தொடர்பான மேலதிக தலையீடுகளை மேற்கொள்ளும் நோக்கில் எதிர்க்கட்சி ஒன்றியம் வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில்கூடிகலந்துரையாடியது. இதன் போது இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் போது கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர், தரக்குறைவான மருந்துப் பொருள்கள் பாவனையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குஎதிர்க்கட்சியில் இருந்து நிவாரணத் திட்டத்தை செயல்படுத்தவும், இந்த மோசடிகளில் ஈடுபட்டு வரும் நபர்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (05)



## குப்பையால் நிரம்பி வழிகிறது நீர்கொழும்பு வைத்தியசாலை

நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் இருந்து அகற்றப்படும் கழிவுகளை நீர்கொழும்பு மாநகர சபை வாரக் கணக்கில் அகற்றாத நிலையில் வைத்தியசாலையில் கழிவுகள் நிரம்பியுள்ளன.

இதனால் அருகில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் உட்பட அயலில் வசிப்போர் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

சீரற்ற காலநிலை காரணமாகக் கொழும்பு உள்ளிட்ட சிலப்பகுதிகளில் கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)



## மூளைசாலிகள் வெளியேற்றத்துக்கு பொருளாதார பாதிப்பு காரணமல்ல

### ரஞ்சித் சியம்பலாபிட்டிய கூறுகிறார்

பொருளாதாரப் பாதிப்பால் மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்க முடியாது.



கடந்த ஆட்சி எடுத்த தவறான தீர்மானங்களைத் திருத்திக் கொண்டுள்ளோம். மூளைசாலிகள் வெளியேற்றத்தைத் தடுக்க உரிய நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதுஎன நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு –

கடந்தஅரசாங்கம்எடுத்ததவறான தீர்மானங்களால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். பொருளாதாரப் பாதிப்பின் காரணமாகவே பெரும் பாலான மூளைசாலிகள் அப்போது நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

பொருளாதாரத்தில் அமுல் படுத்தப்பட்டதவறானதீர்மானங்களைத் தற்போது திருத்திக் கொண்டுள்ளோம்.

பொருளாதாரப்பாதிப்பின்காரணமாகவே தற்போதும் மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தொழிற்றுறையினர் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்க உரியநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

படித்த இளைஞர், யுவதிகள் தொழில்பயிற்சிகளைபெற்றுநாட்டை விட்டு தொழில்வாய்புகளுக்காக வெளியேறுகிறார்கள்.

இதனைர் பாதகமான அம்சம் என்று கருத முடியாது. தேசிய தொழிற்றுறையைப் பாதுகாக்க அமைச்சு சார் மட்டத்தில் பல புதிய கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வரிக் கொள்கையைத் திருத்தியமைக்க விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பணவீக்கம் மற்றும் உணவல்லாத பணவீக்கம் சடுதியாகக் குறைவடைந்துள்ளன.

இந்த ஆண்டின் இறுதி பகுதிக்குள் வங்கி வட்டிவீதங்கள் குறைக்கப்படும். நெருக்கடியான நிலையில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சியடைந்து வருகிறோம். – என்றார். (05)

## ஆட்சி அதிகாரத்தை சஜித்திடம் ஒப்படைக்க மக்கள் மூடர்களல்லர்

### நிமல் சிறிபாலடி சில்வா கூறுகிறார்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் ஆட்சியதிகாரத்தைஒப்படைக்கநாட்டுமக்கள் மூடர்களல்லர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கபொய்யுரைக்காமல் உண்மையைக் குறிப்பிட்டு அரச நிர்வாகத்தை முன்னெடுக்கிறார் என கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

பொருளாதாரப் பாதிப்பால் மூளைசாலிகள்தற்போது நாட்டை விட்டுவெளியேறுகிறார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மூளைசாலிகள் வெளியேற்றம் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்லஎன்பதை எதிர்க்கட்சியினர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். மூளைசாலிகள்வெளியேற்றத்தை தமது அரசியல் பிரசாரத்துக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மை இல்லாத காரணத்தால் மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்று எதிரணியினர் குறிப்பிடுகிறார்கள். நாட்டில் யார் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது.

அரகலய என்ப தொன்றை ஆரம்பித்து நாட்டில் பயங்கரவாத செயற்பாடுகளைத் தோற்றுவித்தவர்கள் தான் இன்று ஸ்திரமற்ற அரசியல் காரணிகளால் மூளைசாலிகள் வெளியேறுகிறார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். இது வேடிக்கையாகவுள்ளது.

பொருளாதாரப்பாதிப்புக்குஓரிரு இரவில் தீர்வு காண முடியாது. வரியை அதிகரித்தாலும் விமர்சிக்கிறார்கள், குறைத்தாலும்விமர்சிக்கிறார்கள். வரி வருமானத்தை அதிகரிக்காமல் ஒருபோதும் பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண முடியாது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அறியாமல் இருக்கிறார். எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆட்சியதிகாரத்தை வழங்க மக்கள் முட்டாள்களல்லர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையைஉறுதிப்படுத்தினார். வங்குரோத்துநிலைக்குமத்தியில்பிரபல்யமடையும்வகையில் ஜனாதிபதி செயற்படவில்லை. நாட்டு மக்களுக்கு உண்மையைக் குறிப்பிட்டு சிறந்த முறையில் செயற்படுகிறார். ஆகவே, நாட்டு மக்கள் வெகுவிரைவில் உண்மையை விளங்கிக் கொள்வார்கள்.– என்றார். (05)

## ரயிலிலிருந்து தூக்கியெறியப்பட்ட சிறுமி பரிதாபகரமாக உயிரிழப்பு

மாத்தறை பகுதியை சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவர் கடுகதி ரயிலில் இருந்து தூக்கி எறியப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி வியாழக்கிழமை வல்பல பிரதேசத்தில் இருந்து பொலியத்தை நோக்கி பயணித்த ரயிலில் சிக்குண்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

மாத்தறை பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தது வருகின்றனர். (05)

## 4 மாத குழந்தை மீது வெறித்தனம் மொனராகலையில் தந்தை கைது

4 மாத குழந்தையை துஷ்பிரயோகப்படுத்திய 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர் மொனராகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட குழந்தையின் தாய் முன்வைத்த ப் பாட்டுக்கமைய இந்த கைது இடம்பெற்றுள்ளது.

தமது ஏனைய பிள்ளைகளின் பாடசாலைஒன்றுகூடலில்கலந்து கொள்வதாக செல்லவிருந்த நிலையில் குழந்தையை சந்தேக நபரிடம் (தந்தை) ஒப்படைத்து விட்டு சென்றதாகவும் திரும்பி வந்தபோதுகுழந்தைதுஸ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டிருப்பதை அவதானித்ததாகவும்குழந்தையின் தாயார் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இந்நிலையில் கைது செய்யபப்ட்டுள்ள சந்தேக நபர்மொனறாகலைநீதிவான்நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தபபடவுள்ளார் எனப் பொலிஸ் ஊடக பிரிவு தெ ரிவித்துள்ளது. (05)

## பெத்தகான ஈரநில பூங்காவிற்கு வெளிநாட்டமைச்சர்கள் வருகை

ஆசிய பசுபிக் வலய சுற்றாடல் மாநாட்டிற்கு வருகை தந்த வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழு வெள்ளிக்கிழமை பெத்தகான ஈரநில பூங்காவிற்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

5 ஆவது ஆசிய பசுபிக் வலய சுற்றாடல் அமைச்சர்கள் மாநாடு இலங்கையில் ஒக்ரோபர் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்தப் பிரதிநிதிகள் குழு அதே நேரத்தில் பெத்தகான ஈரநில பூங்காவிற்கு வந்துள்ளது.

சுற்றாடல் அமைச்சும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றாடல்மற்றும்நிலப்பரப்புப்பிரிவும் இணைந்துஇந்தநிகழ்ச்சியைஏற்பாடு செய்திருந்தன.

நகரஅபிவிருத்திஅதிகாரசபையின் அதிகாரிகள்மூலம்பெத்தகான ஈரநில பூங்கா மற்றும் ஈரநிலங்களின் தாவரங்கள்மற்றும்விலங்கினங்கள் குறித்து விளக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுற்றாடல் அமைச்சின் மேலதிக செயலாளர் பத்மா அபேகோன், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் (ஆலோசனை) ஆனந்த சமரசிங்க, பணிப்பாளர் (சுற்றுச்சூழல் மற்றும்நிலப்பரப்பு) சந்தனா கலுபான மற்றும் ஏனைய அதிகாரிகள் கலந்துகொண்டனர். (05)

## ஆஞ்சியோகிராம் பரிசோதனை செய்வதில் கண்டி தேசிய வைத்தியசாலையில் சிக்கல்

கொழும்பு மற்றும் கண்டி மாவட்ட தேசிய வைத்திய சாலைகளில் இருதயநோய் தொடர்பான ஆஞ்சியோகிராம் பரிசோதனைகள்மேற்கொள்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்ம விக்ரம தெரிவித்துள்ளார். இந்த ஆஞ்சியோகிராம் பரிசோதனை இயந்திரங்கள் பழுதடைந்து 6 மாதங்களாகியும் இன்னும் பழுதுபார்க்கப்படாமல் உள்ளன. மேலதிகமான ஆஞ்சியோகிராம் பரிசோதனைஇயந்திரங்களுக்கும் பற்றாக் குறையாக உள்ளது.

இதனால் இருதயநோயாளிகள் பெரும்பாலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்எனஅவர்மேலும் தெரிவித்துள்ளார். (05)

## மலேசியாவில் இலங்கையர் கொலைகளுக்கு பணவிவகாரமே காரணம் என்கிறது பொலிஸ்

மலேசியாவின் சென்டிலில் இலங்கையர் மூவர் கொல்லப்பட்டதன் பின்னணியில் பணவிவகாரம்உள்ளதாகமலேசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைமுடிவடைந்துள்ளது நான்குசந்தேகநபர்களுக்குஎதிராகக் கொலைக்குற்றச்சாட்டுகளை சுமத் துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக நகரபொலிஸ் தலைமை ஆணையாளர் டட்டுக் அப்துல் மஜித் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட ஒருவரின் பெற்றோர் உட்பட நான்கு சந்தேகநபர்கள் உள்ளனர் பணவிவகாரமும் கடன் விவகாரமும் இதற்குக் காரணமாக இருக்கலாம் என நாங்கள் கருதுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். செப்ரெம்பர் 22 ஆம் திகதி சென்டில் உள்ள வீடொன்றில் மூவர் படுகொலை செய்யப்பட்டநிலையில் மீட்கப்பட்டனர். வீட்டில் வாடகைக்கு குடியிருந்தவர்களும் உரிமையாளரும் மகனுமே சடலமாக மீட்கப்பட்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்களை முட்டாள்கள் என நினைக்கும் அரசியல்

கிழக்கில்மட்டக்களப்புநகருக்குவந்துள்ளஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இங்கு உரையாற்றும்போது அடுத்த வருடம் அதிகாரப் பகிர்வு இடம்பெறும் என்று தெரிவித்திருக்கின்றார். பொலிஸ் அதிகாரம் அற்ற மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வதில் தான் அப்பணிப்போடு இருக்கின்றார் என்று தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, அனைத்துத் தலைவர்களுடனும் பேசி அமைதித் தீர்வு ஒன்று பெறப்படும் என்றும் தெரிவிக்கிறார்.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியிருக்கும் சூழலில் – அது நடக்குமா இல்லையா என்கிற கேள்விக்குறி ஒருபுறம் இருந்தாலும், அரசமைப்புப்படி தேர்தல் நடத்தப்படவேண்டியிருக்கின்றது – அடுத்த வருடம் தீர்வு என்கிற ரணிலின் அறிவிப்பு குதிரை வண்டியின் முன்பாகக் கட்டப்பட்டிருக்கும் கரட்தான் என்பதில் சந்தேகமே வேண்டாம்.

முதலில் ஜனாதிபதியானதும் நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னதாகத் தீர்வு என்று அறிவித்தவர் ரணில் விக்கிரமவிங்க. அவரது கட்சியின் அரசியல் எதிரியான பொது ஜன பெரமுனவின் ஆதரவுடன் அதிகாரத்தைப் பிடித்திருப்பவர், ராஜபக் ஷக்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்திருப்பதன் காரணத்தால் ரணில் தயவில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற நிலையில் அவர் கூறுவது நடப்பதற்கான சாத்தியங்கள் இருக்குமோ என்கிற ஒரு கொஞ்ச நஞ்ச நம்பிக்கை மக்கள் மனங்களில் எழுந்தது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.


அதன்பின்னர், தமிழ்க்கட்சிகளின்கோரிக்கையான தீர்வுவரைக்கும்அரசமைப்பின்13ஆவதுதிருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் என்பதைக் கையில் எடுத்தார். 13ஐ முழுமையாக நடத்தப் போகின்றேன் என்று கூறி அனைத்துக் கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகள் கூட்டத்தைக காட்டினார். அதில் கடும்போக்குவாதிகளின் கருத்துக்களுக்கு எதிராக, ஏதோ தீவிரமாக 13ஐ நடைமுறைப்படுத்தப் போகிறார் என்பதைப் போல கருத்துக்களை முன்வைத்தார். இதன் மூலம் பிக்குகளைத் தூண்டிவிட்டு அவர்களை வீதியில் இறங்கிப் போராட வைத்தார். இறுதியில் அந்த முயற்சியை அப்படியே சத்தம் சந்தடியின்றிக் கைவிட்டார்.

பின்னர், வடக்குமாகாணமுன்னாள்முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் சேர்ந்து கொண்டு, அவரை நம்ப வைத்து அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்துதல் என்கிற திட்டத்தை அறிவித்தார். அமெரிக்காசென்றுவந்ததும்இதற்கான குழுக்களின் நியமனங்கள் இடம்பெறும் என்று விக்னேஸ்வரனுக்கு வாக்குறுதியளித்திருந்தார். இப்போது அதைப்பற்றிய மூச்சுப் பேச்சும் இல்லாமல், அடுத்த வருடம் தீர்வுக்கான பேச்சு இடம்பெறும் என்கிற சாரப்பட கருத்துத் தெரிவித்துள்ளார்.

இவையெல்லாம் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஒரு வருட காலத்தில் தீர்வு தொடர்பில் ஆடிய சித்துக்கள். அவர் தலைமை அமைச்சராக இருந்த காலங்களிலும் அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலங்களிலும் இதுபோன்று ஆடிய மிக மோசமான அரசியல் ஆட்டங்களின் வரலாறு எக்கச்சக்கமாக இருக்கின்றது. மக்களை முடாள்களாகக் கணிக்கும் அரசியல்வாதிகளின் இத்தகையநடவடிக்கைகளுக்கானபயனைஅவர்கள் இறுதியில் ஒருநாள் அடைய வேண்டியிருக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது.

# நாட்டை திவால் நிலையிலிருந்து காப்பாற்றக்கூடிய அணியா இது?

உடுல் யோசப் பெர்னான்டோ



‘இந்த நாடு திவாலாகிவிட்டதாக அறிவித்தபோது, என்னால் முடிந்தவரை இந்த நிலமையை வெற்றிகொள்ள முயற்சிக்கவேண்டும் என்று தோன்றியது. ஜீலை அல்லது ஒகஸ்ட் மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை எதிர்பார்க்கிறேன். செப்டம்பருக்குள் எல்லாம் முடிந்து நாடு இயல்பு நிலைக்கு மீண்டுவிடும்”

லங்காதீப பத்திரிகையில் 21.05.2023 அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாக வெளியான செய்தி இது.

”வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்து விடுவிக்க முடியும் என நம்புகிறேன். நீங்கள் சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும் சரி, வேறு எந்த இனத்தவராக இருந்தாலும் சரி, நாடு திவாலாகுவதை யாரும் விரும்புவதில்லை. தாங்கள் கடனில் மூழ்கிப் போனவர்கள் என்கிற அடையாளத்தை (லேபிளை) ஒட்டித் திரிய எவருக்கும் விருப்பமில்லை என்று எனக்குத் தெரியும். எனவே, இந்த திவால் முத்திரையை அகற்ற நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.”



இது, 30.06.2023 அன்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த விடயம்.

இப்போது செப்டம்பர் மாதமும் முடிவடைந்துவிட்டது.



“ஆனாலும் நாங்கள் இன்னும் திவாலாகியே கிடக்கின்றோம்...”

இலங்கையை உடனடியாக வங்குரோத்துப் பொருளாதாரத்திலிருந்து மீட்பது நிச்சயமற்றது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு வழங்கப்படவிருந்த இரண்டாவது கட்ட கடனை அது காலவரையறையின்றி ஒத்தி வைத்துள்ளது.

கடந்த வருடம் முழுவதும் ஜனாதிபதியும், ஆளும் தரப் பும் ஊடகங்களும் ”எல்லாம் சரியாக இருக்கின்றன’’ என்று சொன்னார்கள்...

ஜனாதிபதி மட்டுமல்ல ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்கள், ஊடகங்கள் மற்றும் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆலோசனைகள் கூறிவருபவர்களான மத்திய வங்கியின் ஆளுநர், நிதியமைச்சின் செயலாளர், கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி எல்லோருமே ’’எல்லாம் சரியாகவே இருக்கின்றன” என்றனர்.

சர்வதேச மாநாடுகளுக்குச் சென்ற ரணில் ‘‘எல்லாம் சிறப்பாகவே இருக்கின்றன’’ என்று சொன்னார். ஆனால் சர்வதேச நாணய நிதியமோ இலங்கைக்கு முழுநேர நிதியமைச்சர் ஒருவர் தேவை என்று தெரிவித்துள்ளது. முதலாவது மீளாய்வுக்காக இலங்கையில் காலடி வைப்பதற்கு முன்பே அது இதனைச் சொன்னது. கோட்டா ஜனாதிபதியாக இருந்த காலத்தில், ரணிலை பிரதமராக்கி நிதியமைச்சர் பதவியை அவரிடமிருந்து பிடுங்க முடிவு செய்திருந்தார். ஆனால், ரணில் ஜனாதிபதியாகி நிதியமைச்சர் பதவியை தன்னிடமே வைத்திருந்தார்.

ரணில் ஜனாதிபதியான பின்னர் கடந்த வருடம் இலங்கையில் இருந்ததைவிட வெளிநாடுகளில் இருந்ததே அதிகம். சர்வதேச நாணய நிதியம் இரண்டாவது தவணைக் கடனை வழங்குவதற்கு முன்னதாக தனது முதல் மீளாய்வுக்காக கொழும்புக்கு வந்திருந்தபோதும் அவர் வெளிநாட்டிலேயே இருந்தார். இரண்டு வாரங்களில் மூன்று முறை அவர் வெளிநாடுகளுக்குப் பறந்திருக்கிறார். ஒரு நாட்டைத் திவால் நிலையில் இருந்து மீட்க நிதியமைச்சர் இரவு பகலாக உழைக்கவேண்டும். ஆனால், ஒரு நிதியமைச்சர் செய்யவேண்டிய வேலையை ரணில் செய்யவில்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

‘யார் இந்த மத்திய வங்கி ஆளுநர் நந்தலால்...?’

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது மத்திய வங்கியின் துணை ஆளுநராகப் பதவி வகித்தவர். கோட்டாவுடன் முரண்பட்டுக்கொண்டு தனது பதவியிலிருந்து விலகியவர். அவர் அப்படி விலகியபோது அவரது மகள் தனது முகநூல் பக்கத்தில் ஒரு பதிவையிட்டார். நாட்டின் இரு பெரும் கட்சிகளும் பதவிக்கு வரும்போதும் மாறி மாறி எனது தந்தை ஆளும் தரப்புக்கு எதிரான கட்சிக்கு ஆதரவளிக்கின்றார் என்று குற்றஞ்சாட்டுகின்றன என்று அவர் பதிவிட்டார். மகள் சொன்னது உண்மைதான். நந்தலால் எப்போதும் கட்சிகளுக்கு உதவி செய்பவர்.

மகிந்த ராஜபக் ஆட்சியில் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தவரான அஜித் நிவார்ட் கப்ராலால் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டவர் நந்ததால். அப்போது அவரை “சேர்” என்றே நந்தலால் அழைத்து வந்தார். 2015ஆம் ஆண்டு மைத்திரி -ரணில் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து அர்ஜுன் மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராக பதவியேற்றார். அப்போது அவரையும் நந்தலால் ‘‘சேர்’’ ஏன்றே அழைத்தார். அர்ஜுன் மகேந்திரனை வெளியேற்ற ஜனாதிபதி மைத்திரி தீர்மானித்தபோது மைத்திரியை “சேர்” என்று அழைத்த நந்தலால் அர்ஜுன் மகேந்திரனைத் தாக்கினார். மத்திய வங்கியின் தலைவராக மைத்திரி தன்னை நியமிப்பார் என அவர் எதிர்பார்த்தார். ஆனால் ரணில் அதற்கு இடமளிக்கவில்லை. மத்திய வங்கியின் ஆளுநராக இந்திரஜித் குமாரசுவாமி நியமிக்கப்பட்டார். அப்போது நந்தலால் அவரையும் ‘‘சேர்’’ என்றே அழைத்தார்.

2019இல் கோட்டா மீண்டும் ஆட்சிக்கு வந்து அஜித் நிவார்ட் கப்ரால் நிதி அமைச்சரானபோது நந்தலால் அவரை மீண்டும் “சேர்” என்று அழைத்தார், ஆனால் தான் உருவாக்கிய நந்தலால் தன்னை ஏமாற்றியதை நினைத்து கப்ரால் அவருக்கு கடும் நெருக்கடி கொடுத்தார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஈ-ரிஜ விசாரணையில் சாட்சியமளிக்க நந்தலாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அத்துடன், மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் நந்தலாலுக்கு தொடர்பு இருப்பதாக ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதால், அவரை உடனடியாக கைது செய்யுமாறு அர்ஜுன் மகேந்திரனின் மருமகன் அர்ஜுன் அலோசியஸ் நீதிமன்ற நகர்த்தல் பத்திரம் மூலம் கோரினார்.

இதுதான் நந்தலாலின் வரலாறு. இலங்கையை திவாலாக்கியவர்கள் நிதி அமைச்சர்கள் மாத்திரமல்ல, மத்திய வங்கியும் அதன் ஆளுநர்களும் கூடப் பொறுப்பு. நந்தலால் மத்திய வங்கியின் முன்னாள் மூத்த அதிகாரி ஆவார். நிதியமைச்சர்கள் உலக நாடுகளிடம் இருந்து கடன் வாங்கியபோது இலங்கைக்கு கடன்களைப் பெற்றுக்கொடுக்குமாறு ஆலோசனை வழங்கிய மத்திய வங்கி அதிகாரிகளில் இவரும் முக்கியமானவர்.

“அப்படியானால் நந்தலால்



இலங்கையை திவால்நிலையிலிருந்து காப்பாற்றுவார் என்று நினைப்பவர்கள் இலங்கையில் இருக்கிறார்களா...?”

அதுதான் இலங்கையின் துரதிஷ்டம். நந்தலாலை மத்திய வங்கியின் ஆளுநராக கோட்டாபய நியமித்த நாளிலிருந்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் ஒரு பொது வேட்பாளராக வருவதற்காக அல்லது சர்வதேச நாணய நிதியத்தில் சிறப்பான ஒரு பதவியைப் பெறுவதற்காக அவர் கடுமையாக உழைத்தார். முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை உலகின் சிறந்த நிதியமைச்சர் என்ற அறிவித்த நிதியியல் சஞ்சிகையிடமிருந்து சிறந்த மத்திய வங்கி ஆளுநர் விருதைப் பெறுவதற்கும் அவர் கடுமையாக முயன்றார். எப்படியோ பத்திரிக்கையில் அவர் அதனைச் செய்து முடித்தார், ஆனால் நாடு இன்னும் திவாலாகி விட்டது. நந்தலால் அந்த வகைப்பட்ட ஒரு வங்கியலாளர்.

“யார் இந்த நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன...?”

மஹிந்த சிறிவர்தன மத்திய வங்கியின் முன்னாள் அதிகாரியாக 30 வருடங்கள் இருந்தவர். நாடு திவாலாகும் நிலைக்குச் செல்வதற்கு நிதி அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கிய அதிகாரிகளில் அவரும் ஒருவர். செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பிறகு, திறைசேரியில் பணம் இல்லை என்று கூறி ரணிலுக்காக உள்ளூராட்சித் தேர்தலை ஒத்தி வைத்து காலத்தை கடத்தினார். தேர்தல் நடந்தால் ஐஎம்எப் திட்டம் சீர்குலைந்து விடும் என்று ஒருமுறை நீதிமன்றத்திலும் கூறினார். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பாக ஆளும் தரப்புக்கு ஆலோசனை வழங்கிய நிதியமைச்சர் ரணில், மத்திய வங்கி ஆளுநர் நந்தலால், நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் இந்திரஜித் குமாரசாமி ஆகியோரால் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் இப்போது சீர்குலைந்துள்ளது. இவர்களால் இப்போது இலங்கையைப் பிணை எடுக்கும் தனது செயற்றிட்டத்தை சர்வதேச நாணய நிதியம் ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்துவிட்டது.

(8ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் எதிர்பார்க்கும் தலைவரையே பொது ஜன பெரமுன முன்னிறுத்தும்

## மஹிந்த திட்டவட்ட அறிவிப்பு









மக்கள் எதிர்பார்க்கும் தலைவருக்கு தமது அணி தலைமைத்துவத்தை வழங்க எதிர்பார்ப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு மயூராபதி ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டு நிகழ்வொன்றைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்கால அரசியல் நடவடிக்கை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு தொடர்ந்தும் பதில் வழங்கிய அவர் -

நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் வகையிலான தலைவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்துக்குத் தெரிவு செய்யப்படுவார். எமது அணியில் இளைஞர் அணியினர் பலரும் உள்ளனர். எதிர்காலத்தில் அவர்களுக்கு ஆதரவை வழங்கி முன் கொண்டு செல்ல எதிர்பார்க்கிறோம். நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் வகையிலான சிரேஷ்ட பிரஜை ஒருவருக்கு கட்சி தலைமைத்துவத்தை வழங்க எதிர்பார்க்கிறது.

மக்கள்ஏற்றுகொள்ளும்உறுப்பினருக்கு தலைமைத்துவம் வழங்கப்படும். மக்களே எனக்கும் தலைமைத்துவத்தை வழங்கினார்கள் எதிர்காலத்திலும் அவ்வாறே இடம்பெறும் எனத் தெரிவித்தார்.

நீண்டகாலமாகப்பொதுவிடங்களுக்குச் செல்வதைத்தவிர்த்துவந்தமுன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தற்போது நாட்டின் பல்வேறுவணக்கஸ்தலங்களுக்கும்சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

# சர்வதேச விசாரணைகளை நடத்துவது சட்டவிரோதம்

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு கவனம்

2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட ஞானார்த்த பிரதீபய பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் மற்றும் 'சுயாதீனமானதும் வெளிப்படையானதுமான முழுமையான விசாரணை மற்றும் கண்காணிப்புக்கு சர்வதேச விசாரணைக் குழு ஒன்று தேவை' என்ற தலைப்பில் வெளியான செய்தி அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்அந்தப்பிரிவுதெரிவித்துள்ளதாவது:

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர், புனித ஹெரால்ட் அந்தோனி பாதிரியாரின் வேண்டுகோளுக்கிணங்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் 88 தொகுதிகள் மற்றும் 48,909 பக்கங்கள் அடங்கிய அனைத்து ஆவணங்களையும் 2023 ஏப்ரல் 20 ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், புனித ஹெரால்ட் அந்தோனி பாதிரியாரிடம் கையளித்தார். திருச்சபையின் தலைவர், புனித ஹெரால்ட் அந்தோனி பாதிரியாருடன் வியாழக்கிழமை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தொலைபேசியில் கலந்துரையாடிய போது, தான் குறித்த அறிக்கையை ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அந்த அறிக்கையை ஆராய்ந்த பின்னர் கத்தோலிக்க திருச்சபையின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தயாராக உள்ளார்.

இலங்கையின் உள்ளக விவகாரங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்துவதுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கையின் அரசமைப்பிலும் வேறு எந்த சட்டத்திலும் சர்வதேச விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லை. அதன்படி, இதுபோன்ற விசாரணைகளை நடத்துவது சட்டவிரோதமானது.

செனல் 4 தொலைக்காட்சி நிகழ்ச்சி குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

திருச்சபை, ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்த பின்னர் இது குறித்து மேலும் கலந்துரையாட அரசாங்கம் எதிர்பார்க்கிறது. (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# போர்க் காலத்தைவிடவும் தற்போது மூளைசாலிகள் வெளியேற்றம் தீவிரம்

## மைத்திரிபால தெரிவிப்பு



நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மை உறுதிப்படுத்தாமல் எப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. ஆகவே உடனடியாக தேசிய தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும்.

மூளைசாலிகள் வெளியேற்றம் பாரிய எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் தொழிற்றுறையினருடன் முரண்பட்டுக்கொண்டிருக்கிறது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

படித்த இளம் தலைமுறையினர் நாட்டை விட்டு வெளியேறுவதை பிரதான நோக்கமாககொண்டுள்ளார்கள். 30 வருட கால யுத்த காலத்தில் மூளைசாலிகள் வெளியேறியதை போன்று தற்போதும் மூளைசாலிகள் வெளியேறினார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. யுத்த காலத்தை காட்டிலும் தற்போது மூளைசாலிகள் வெளியேற்றம் தீவிரமடைந்துள்ளது.

விசேட வைத்தியர்கள், வைத்தியர்கள் உட்பட சுகாதார தரப்பினர் நாட்டை விட்டு வெளியேறுகின்றமை பாரதூரமானது. வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் சுகாதாரக் கட்டமைப்பு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் நடுத்தர மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். ஒரு வைத்தியர் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 50 பேருக்கு சாதாரண அளவு சிகிச்சையளிக்க முடியும்.

ஆனால் தற்போதைய நிலையில் அரச வைத்தியசாலைகளில் வைத்தியர் ஒருவர் ஒரு நாளைக்கு 200 இற்கும் அதிகமானோருக்கு சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது.

சுகாதாரக் கட்டமைப்பைப் போன்று பல்கலைக்கழக கல்வி கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. விரிவுரையாளர்கள் பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதுமிகவும் பாரதூரமானது. கல்வித்துறை வீழ்ச்சியடைந்தால் சிறந்த எதிர்கால தலைமுறையினரை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

மூளைசாலிகள் வெளியேற்றத்துக்குத் தீர்வு காண அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? தொழிற்றுறையினருடன் பேச்சுகள் மேற்கொள்வதைத் தவிர்த்து அவர்களுடன் அரசாங்கம் முரண்பட்டுக்கொண்டிருக்கிறது.

நாட்டில் அரசியல் நெருக்கடி தோற்றம் பெற்றதன் பின்னரே சகல பிரச்சினைகளும் தோற்றம் பெற்றன. இன்று ஆளும் கட்சியும் பிளவடைந்துள்ளது, எதிர்க்கட்சிகளும் பிளவடைந்துள்ளன. இவ்வாறான நிலையில் எந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையுடன் தான் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். ஆகவே உடனடியாக தேசிய தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (05)

# 240 பாடசாலைகளுக்கு யானை அச்சுறுத்தல்

## வடமேல் மாகாணத்தில்

வடமேல் மாகாணத்தில் உள்ள 240 பாடசாலைகளுக்கு யானைகளால் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் அதில் கிட்டத்தட்ட 179 பாடசாலைகள் மிகவும் ஆபத்து நிறைந்தவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி முதிதா ஜயரத்ன தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தின் கல்வி வலயத்தில் உள்ள 38 பாடசாலைகளும் நிக்கவெரட்டிய பிரதேசத்தில் உள்ள 57 பாடசாலைகளும் இப்பாகமுவ பிரதேசத்தில் உள்ள 4 பாடசாலைகளும் யானைகள் அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களில் அமைந்துள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் தினமும் 61 பாடசாலைகளுக்குள் யானைகள் நுழைந்து சேதம் ஏற்படுத்துகின்றன என அவர் தெரிவித்தார்.

மேலும், புத்தளம் மாவட்டத்தில் உள்ள 32 பாடசாலைகளில் 23 பாடசாலைகளின் பதிவு அறிக்கைகளின்படி யானைகள் பாடசாலைகளுக்குள் நுழைந்து சேதம் ஏற்படுத்துவதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பாடசாலைகளில் பாடசாலை வளங்கள் சேதமடைந்துள்ள போதிலும் பாடசாலை மாணவர்களுக்கு எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

யானைகளின் அச்சுறுத்தலைக் குறைப்பதற்காக வனஜீவராசிகள் திணைக்களத்தால் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (05)

# இந்திக்க தொடவத்த ஜோதிடர் கைதானார்



ஜோதிடர் இந்திக்க தொடவத்த கைது செய்யப்பட்டுள்ளார்.

கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மதம் மற்றும் தேசிய நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் கருத்து தெரிவித்ததாக தெரிவித்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# கட்டடத்தில் இருந்து தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

பாணந்துறை கெசல்வத்தை பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்மடத்தின் நான்காவது மாடியில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் என பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

ரணல, நவகமுவ பகுதியைச் சேர்ந்த மெஞ்சிகேலசந்த ரொான் என்ற 45 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் சுற்றுலா ஹோட்டலில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் பணிபுரிந்து வந்தார் எனவும், வேலை செய்யும் போது கீழே விழுந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். பலத்த காயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir

## இன, மத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போரொன்றை உருவாக்குவதே அவருடையதிட்டமாகஇருக்கின்றது.

ஏனென்றால் நான் உள்ளிட்ட தேரர்கள்எமதுமக்களுக்குநியாயம் கோரிவருகைதந்திருக்கின்றபோது, அதனை அப்பாவி தமிழ் பண்ணையாளர்கள் அவர்களுக்கு எதிராகநான்செயற்படுவதுபோன்று எண்ணுகின்றார்கள். அவர்கள் போராடுகின்றபோது அவர்கள் எமக்கு எதிராக போராடுவது போன்றுதோன்றுகின்றது. இதனை பயன்படுத்தி இலபமடைபவர் சாணக்கியன்என்றநபர்தான். இதற்கு இடமளிக்க முடியாது. இதனை அப்பாவிதமிழ்பண்ணையாளர்கள் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க, புலிகளின் வீட்டில் பகல் உணவை அருந்திவிட்டு எம்மை நடுவீதியில் வெயிலில் காத்திருக்கச் செய்துவிட்டார். நாம் அவரை மோசமாக திட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர் எனது மனுவைப் பெற்றுக்கொண்டு அதனை பரிசீலனை செய்வதாக கூறியிருந்தாலே போதுமானது.

தற்போது பாருங்கள், அவருக்கு நகரின்மத்தியில்அழகானவரவேற்பு அலங்காரங்கள்செய்யப்பட்டுள்ளன. முப்பது அடிவரையிலான கட்டவுட் வைக்கப்பட்டுள்ளது. அவர் அவை அனைத்தையும் பார்க்காது எங்கோவுள்ள முடுக்குச் சந்திக்குள்ளால் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நான்உள்ளிட்டஎனதுமக்களின் போராட்டத்தால் அவர் பற்றைகளுக்குள்ளால் பயந்து ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதை இட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அவரை சந்திப்பதற்கு மீண்டும் வருவேன் - என்றார்.

## ஒக்டோபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்கப்படாமல் உள்ளமையால் அவற்றைதீர்க்கும் முகமாக ஆளும் தரப்பிற்குஅழுத்தம்கொடுப்பதற்காக தற்போது போராட்டம் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளோம்.

பல ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களில் கடமையாற்றி வரும் நிலையில் அவர்களுக்கு வழங்கவேண்டிய 20,000 ரூபாய் நிலுவையை ஆட்சியாளர்கள் வழங்கவேண்டும்.

ஆகவே, அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்குத் நிரந்தர தீர்வை காணும் முகமாக ஒக்டோபர் 24 அனைத்து அதிபர்களும் ஆசிரியர்களும் கொழும்பில் இடம்பெறும் உரிமைப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் - என்றார் அவர்.

## பொதுத்தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசமைப்பின்படி, 225நாடாளுமன்றஉறுப்பினர்களில் 196 பேர் விகிதாசார அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எஞ்சியுள்ள 29 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகள் பெற்ற வாக்குகளின் வீதத்திற்கு ஏற்ப அந்தந்த கட்சிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## தெற்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பான 16 இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றுள்ளது.

இதேவேளை, பலத்த மழையினால் காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாயசிவப்புஎச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த 18 மணித்தியாலங்களில் மாத்தறை மாவட்டத்தில் பிட்டபெத்தர பகுதியில் அதியுச்சமாக 116 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதோடு நில்வள கங்கையை அண்மித்து 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அவ்வாறுகடும்மழைபெய்தால், நில்வள கங்கை பெருக்கெடுக்கும் நிலை ஏற்படுமெனவும் நில்வள கங்கையை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் நாளைதினம் பெரும் வெள்ளம்ஏற்படுவதற்கான அபாயம் நிலவுவதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின்பலபகுதிகளில்இன்றும் பலத்த மழை பெய்யுமெனவும், மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் 75 மில்லி மீற்றர் அளவுவிற்குக் கன மழை பெய்யுமெனவும்வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊவா, கிழக்குமாகாணங்களிலும் பொலன்னறுவை, மாத்தளை, நுவரெலியா, கண்டி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இன்று மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடுமெனவும் அத்திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

## இது வெறும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றையதினம் (நேற்று) அமைதியான நாளாக நிறைவுக்கு வரவில்லை. பதற்றங்கள் உருவாக்கப்படுகின்ற நாளாக மாறியிருக்கின்றது. ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ளார்.

ஆட்சியாளர்களுக்கு எதிராக மட்டக்களப்பில்புரட்சியேற்பட்டுவிடும் என்ற பயத்திலே கிழக்கிலிருக்கும் அனைத்துபொலிஸ்நிலையங்களில் இருந்தும் வாகனங்களை எடுத்துவந்து மக்களை அச்சுறுத்தப் பார்க்கிறார்கள்.

மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்கள் 23 நாட்களாக போராடிவரும்நிலையில்அவர்களின் போராட்டத்தினைநிறுத்தும்வகையில் நீதிமன்ற தடையுத்தரவினை பெற்றுள்ள பொலிஸார் மிகக் கேவலமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

தற்போது எங்களை பிச்சையெடுத்து வாழும் நிலைக்கு இந்த ஆட்சிதள்ளியுள்ளது. இதனாலேயே பண்ணையாளர்களினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பண்ணையாளர்களின் பிரச்சினையை வெறும் பண்ணையாளர்களின் பிரச்சினையாக மட்டும் பார்க்க வேண்டாம். வடகிழக்குதமிழர்களின் நிலம்தொடர்பானபிரச்சினையாகும்.

மயிலத்தமடு, பகுதியில் சிங்களகுடியேற்றங்களை செய்வதற்கான திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு பின்னால் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் போன்றவர்கள் உள்ளார்கள். சின்னவத்தையில் சிங்கள மக்களின் பூர்வமாகக் காணிகள் என்று கூறிக்கொண்டு தமது சகோதரர்களுக்கு காணிகளை களவாடிக்கொடுத்தவர் தான் அம்பிட்டிய சுமனரத்ன தேரர்.

தற்போது, அவருடன் இணைந்த கள்ளர்கள் காணிகள் வேண்டுமென்று; இன்று(நேற்று) போராடினார்கள். சுமனரத்ன தேரருடன் வந்த பிக்குவே கடந்த காலத்தில் மதகுருமார்கள், ஊடகவியலளாஜுகளை மயிலத்தமடுவில் சுமார் ஆறு மணிநேரம் தடுத்துவைத்தவர்.

ஆகவே, மயித்தமடு பண்ணையாளர்களின் நில உரிமைவிடயத்தினைவெறுமனே பண்ணையாளர்களின்விடயமாகப் பார்க்கவேண்டாம். எமது எதிர்கால சந்ததியினரின் விடயமாக பார்க்கவேண்டும். அவர்களிடத்தில் அவற்றைபாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டும் - என்றார்.

## தமிழர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரட்டப்பட்டு வெளியேற்றப் பட்டுள்ளார்கள். அவர்களுடைய மேய்ச்சல் தரைகள் பறிக்கப் பட்டுள்ளன. இதனைஎதிர்த்துநாளை (இன்று) மட்டக்களப்பில் பெரும் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

அவர்களுடையபோராட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக நாமும் வருகை தந்துள்ளோம். அத்துடன் மட்டக்களப்புமயித்தமடுமாதவனை பண்ணையாளர்களுக்கு எமது முழுமையான ஆதரவினை வழங்க வேண்டியுள்ளது. ஆகவே நாளையதினம்(இன்று)அனைவரும் அணிதிரண்டு வருகை தருமாறு அழைப்புவிடுகின்றோம். அத்துடன் எமதுபலத்தினைநாம்வெளிப்படுத்த வேண்டியதருணமும்ஏற்பட்டுள்ளது.

தமிழர்களைத்தாயகத்திலிருந்து விரட்டுவதற்கான சதிமுயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவேமயிலத்தமடுஆக்கிரமிப்புக்கு இடமளிப்போமாக இருந்தால் எதிர்காலத்தில் முல்லைத்தீவு, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் வவுனியா, அம்பாறை என்று விரிவடைந்து செல்வதற்கான நிலைமைகளே உள்ளன. ஆகவே அதற்கு அனுமதி அளிக்காதிருப்பதற்காக அனைவரும்ஒருமித்துஎதிர்ப்பினை வெளியிடுவதற்காக அணி திரள வேண்டும் - என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# பதுளை வின்சென்ட் டயஸ் மைதானத்தில் பாம்புகள்

## அச்சத்தில் மக்கள்

பதுளை, வின்சென்ட் டயஸ் விளையாட்டு மைதானத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நாகபாம்புகள் அதிகம் காணப்படுகின்றன என அப்பிரதேச மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதனால் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுநடவடிக்கைகளுக்காக மைதானத்தைப் பயன்படுத்தும் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது.

அண்மையில் மைதானத்தில் இரண்டு பாம்புக்குட்டிகள் மீட்கப்பட்டன என மைதான பணியாளர்கள் தெரிவித்தனர்.

கால்பந்தாட்ட மைதானத்தின் புல்வெளிப் பகுதியில் இருந்தும் நாகபாம்பு ஒன்று அகற்றப்பட்டதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

குறித்த மைதானத்தில் குப்பைகள் உள்ள பகுதியில் இந்த பாம்புகள் இனப்பெருக்கம் செய்து வாழ்வதாகமைதானபணியாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

வின்சென்ட்டயஸ்மைதானத்தை அன்றாடம் பெருமளவிலான மக்கள் பயன்படுத்துகின்றதால் மக்களின் பாதுகாப்பிற்காக விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு மைதான பணியாளர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# கிளிநொச்சியில் வீட்டுக்கு தீ வைப்பு



கிளிநொச்சி கல்மடுநகர் இராமநாதபுரம்பகுதியில்வீடுஒன்றின்மீது வியாழக்கிழமை இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வீட்டுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 30 ஏக்கர் சந்திப்பதில் உள்ள வீடு ஒன்றின் மீது குறித்த சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டுகுழுக்களுக்குஇடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து குறித்த வீட்டின் மீது தீ மூட்டப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் அறிய முடிகின்றது.

இதேவேளை, கிளிநொச்சி அக்கராயன் குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்தமோட்டார் சைக்கிள் ஒன்று எரியூட்டப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (05)

# நாட்டை திவால் நிலையிலிருந்து.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ரணிலுக்காகத் தேர்தலை பிற்போடுமாறு மஹிந்த சிறிவர்தன வெளியிட்டதுபோன்ற சுற்றறிக்கைகளை பொருளாதாரத்தை மீட்பதற்காகவும்அவர்வெளியிடப்பட்டிருந்தால் இன்று நாடு வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டிருக்கும்.

"யார் இந்த இந்திரஜித் குமாரசாமி...?"

அமெரிக்காவில் மோசடிக் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவரான ராஜ் ராஜரத்தினத்தினால் உலகப் புகழ் பெற்றவர் இந்திரஜித் குமாரசாமி. 2011ஆம் ஆண்டு அமெரிக்காவினால் சிறையில் அடைக்கப்பட்ட ராஜ் ராஜரத்தினத்தின் ஆலோசகராக குமாரசாமி பணியாற்றினார். 1973ஆம் ஆண்டு முதல் மத்திய வங்கியில் பணிபுரிந்து இலங்கையின் திவால் நிலைக்கு பங்களிப்புச் செய்த அதிகாரிகளில் அவரும் ஒருவர். மைத்திரி மற்றும் ரணில் ஆட்சியே அவரை மத்திய வங்கி ஆளுநராக நியமித்தது.

2014ஆம் ஆண்டில் 42.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த கடன் மலை, குமாரசுவாமி மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தபோது 2019இல் 56 பில்லியன் டொலர்களாக உயர்ந்தது. இலங்கையை திவால் நிலையில் இருந்து மீட்க ரணில் அவரிடம் ஆலோசனை பெற்றார். சமீபத்தில் 'எகானமி நெக்ஸ்ட்' இணையதளத்தில் பேட்டி அளித்தபோதுஅருமையானஅறிவுரைஒன்றை குமாரசாமி அளித்தார். அதாவது, தேர்தலை நடத்துவது இலங்கையின் பொருளாதாரத்தின் மீட்சியை சீர்குலைக்கும் என்றார் அவர்.

இவர்கள் எல்லோரும் கூறுவதைப் போன்று இலங்கையின் பொருளாதாரத்தை அப்படியே மீட்டெடுக்க முடியாது என்று சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது. அதற்கு அர்த்தம் தேர்தலை நடத்தக்கூடாது என்பதா?

1977இல் 9.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கையின் கடன், 2022இல் 46.89 பில்லியன் அமெரிக்க டொலர்களா உயர்ந்துள்ளது. ரணிலின் ஆட்சியில் அவர் ஜனாதிபதியாகவும், நந்தலால் மத்திய வங்கி ஆளுநராகவும் சிறிவர்த்தன நிதி அமைச்சின் செயலாளராகவும், இந்திரஜித் குமாரசாமி ஆலோசகராகவும் இருந்து 2022 முதல் மார்ச் 2023 வரையான காலத்தில் மட்டும் 40.12 பில்லியன் டொலர்களில் இருந்து 46.89 பில்லியன் டொலர்களாகக் கடனை அதிகரித்திருக்கிறார்கள்.



1977ஆம் ஆண்டு முதல் தற்போது வரை ரணில் அமைச்சராகவும், பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் பதவி வகித்துள்ளார். நந்தலல்லா, சிறிவர்தன, குமாரசாமி ஆகியோர் மத்திய வங்கியை வழிநடத்தியுள்ளனர்.

கடந்த ஒரு வருட காலத்தில் இவர்களால் என்ன செய்ய முடிந்திருக்கிறது. மக்கள் வாழ விரும்பாத, நாட்டைவிட்டு வெளியேறிவிடத் துடிக்கும் ஒரு நாட்டையே இவர்களால் கட்டியெழுப்புமுடிந்திருக்கிறது. இந்தஅணியால் நாட்டை திவால் நிலையில் இருந்து காப்பாற்ற முடியும் என்றா நினைக்கிறீர்கள்..?

அதற்கு ஒரு புதிய தலைவர் தேவை, ஒரு புதிய அணி தேவை.

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை ஸாஹிறா உயர்தர பெறுபேற்றை மேம்படுத்தும் வழி வகை குறித்து ஆராய்வு





கல்முனை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், கல்லூரியின் உயர்தரப் பிரிவுகளின் ஆசிரியர்களுக்குமிடையிலான சந்திப்பும், உயர்தரப் பிரிவுகளின் எதிர்கால பெறுபேறுகளை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடலும் வியாழக்கிழமை கல்லூரியின் விஞ்ஞானப் பிரிவின் பல்லூடக அறையில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், உயர்தரப் பிரிவுகளுக்குப் பொறுப்பான வலய அதிபரும் கல்லூரியின் பிரதி அதிபருமாகிய ஏ.எச்.எம். அமீன் உட்பட உயர்தர விஞ்ஞான, தொழிநுட்ப மற்றும் கலை, வர்த்தக பிரிவுகளின் பகுதித் தலைவர்கள், ஆசிரியர்களும், பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் பொறியியலாளர் எம்.ஆர்.எம். பர்ஹான், உள்ளிட்ட பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாகவும், தற்போதைய மாணவர்களின் தவணைப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதுடன், எதிர்காலத்தில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக உயர்தரப்பிரிவுகளில் கற்பிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் பட்டியல்படுத்தப்பட்டதுடன், அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும் ஆராயப்பட்டன.

ஈற்றில் உயர்தரப் பெறுபேறுகளை மேம்படுத்தும் நோக்கில், ஒரு செயற்குழு தாபிக்கப்பட்டதுடன், இரு வாரகாலங்களுக்கிடையில், உயர்தரத்திலுள்ள ஒவ்வொரு பாடத்திற்குமான கற்பித்தல் திட்டமிடல்களை இக்குழுவினூடாகப் பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டல் மற்றும் உசார்த்துணை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் பழைய மாணவர் சங்கத்தின் ஒத்துழைப்பை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (05)

## அல்-அஸ்ரப் மகா வித்தி சர்வதேச சிறுவர் தினம்







கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட காரைதீவுக் கோட்ட கமு/கமு/மாவடிப்பள்ளி அல்-அஸ்ரப் மகா வித்தியாலயத்தில் 2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச சிறுவர் தினம் வெகு விமர்சியாக அதிபர் வீ. முஹம்மட் ஸம்ஸம் தலைமையில் கல்லூரியின் முகாமைத்துவக் குழுவினரின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்றது. இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் மௌலவி ஏ.எல்.எம்.ஜஹாங்கீர் (ஹாமி) பிரதம அதிதியாக கலந்து கொண்டார்கள்.

மேலும் கல்லூரியின் பிரதியதிபர்கள், உதவியதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

மாணவர்களின் பலதரப்பட்ட கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன், வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் சிறுவர் தினத்தினையொட்டியதான பாடலை ஆங்கில பாட ஆசிரியை திருமதி எஸ்.எஸ்.ஆயிஷாபாடி அனைவரையும் மகிழ்வித்தார். இந்நிகழ்வின் போது அனை வருக்கும் ஐஸ்கிரீம், பழம், கேக் மற்றும் நினைவுப் பரிசில்களும் கல்லூரியின் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் வழங்கி வைக்கப்பட்டன.

சர்வதேச சிறுவர் தின சிறப்புரைகளை அதிபர் வீ.எம் ஸம்ஸம், பிரதி அதிபர் ஏ. எல். ரஜாப்தீன் , பிரதம அதிதி ஏ. எல்.எம். ஜாகங்கீர் ஆகியோர்களால் நிகழ்த்தப்பட்டதுடன், பிரதி அதிபர் மௌலவி. எம்.சி.எம்.தஸ்தகீரால் நிகழ்வுகள் யாவும் தொகுத்து வழங்கப்பட்டன. (05)

## கல்முனைப் பிராந்திய அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு சுகாதார மேம்பாட்டு செயலமர்வு

பாடசாலை மாணவர்களின் உணவு பாதுகாப்பு மற்றும் போசனையை கருத்தில் கொண்டு அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பாடசாலை சுகாதார மேம்பாடு தொடர்பிலான செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சுற்றுச் சூழல், தொழில், சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்புப் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எஸ்.எம். பௌஸாத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வு பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை கல்வி வலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள், சுகாதார மேம்பாட்டுக் குழு ஆசிரியர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித், பிராந்திய பொது சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.எம்.ஹில்மி, பிராந்திய சுகாதார கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே.எம்.பைறூஸ் பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் லபீர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு குறித்த விடயம் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இதன்போது பிராந்திய தொற்றா நோய்தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ். இர்ாத் கல்முனை தெற்கு, கல்முனை வடக்கு, காரைதீவு மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களின் சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுக்கு சுகாதாரமானதும் போசாக்குமிக்கதுமான உணவுகள் மிகவும் அத்தியாவசியமானது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - சில பாடசாலை சிற்றுண்டிச் சாலைகளில் போசாக்கற்றதும் தரமற்றதுமான உணவுகளே விற்கப்படுகின்றன.

இதனையே எமது பிராந்திய மாணவர்கள் உட்கொள்கின்றனர். இவ்வாறான உணவுகளால் எந்தப் பிரயோசனமும் கிடையாது.

இந்த விடயம் தொடர்பில் சகல தரப்பினரும் அவதானம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இல்லையெனில் ஆரோக்கியமற்ற ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆரோக்கியமற்ற சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டு அவர்களுக்கு கல்வி போதித்து எந்தவொரு முன்னேற்றத்தையும் அடைய முடியாது.

ஆரோக்கியத்தை அடகு வைத்து விட்டு நாம் கற்கின்ற கல்வி சம்பாதிக்கின்ற பணம் ஆகியன எந்த பயனையும் பெற்றுத்தராது. போசாக்கான உணவுகளை உண்ணுவதற்கும் அதன் நன்மைகள் தொடர்பாகவும் மாணவர்களுக்கு ஏத்தி வைத்து அவர்களை வழிகாட்டுவது பாடசாலை அதிபர் ஆசிரியர்களின் பொறுப்பாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(05)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்



மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் 'மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம்' எனும் நோக்குடன் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்ற நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்தாரால் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பாக மருதமுனை மிமா விளையாட்டுக் கழகத்துடனான கலந்துரையாடல் பர்வின் ரெடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்றுபணிப்பாளர் அல்ஹாஜ் கலீல் முஸ்தபா அவர்களுடன் மருதமுனை ஆத்தியடிதோப்பில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன் போது மருதமுனை மிமா விளையாட்டுகழககட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன்,

மிமா விளையாட்டுக் கழக வளர்ச்சிக்கு உத வும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் மருதமுனை இளைஞர்கழகங்களுக்கு உதவுவோம் என்னும் உதவி திட்டத்திற்காக அல் ஹாஜ் கலில் முஸ்தபாவைக் கௌரவிக்கும் வகையில் மருதமுனை மிமா விளையாட்டு கழகத்தினரால் பொன்னாடை போற்றி கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

மேலும் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை மிமா விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கி உதவிய அல் ஹாஜ் கலீல் முஸ்தபா மற்றும் மனாரியன் 88 பிரதானசெயற்பாட்டாளர் ஐ.எல்.முக்தார் ஆகியோருக்கு நன்றிகளும், பாராட்டுக்களும் மிமா விளையாட்டு கழக செயலாளரால் தெரிவிக்கப்பட்டன. (05)

## சாய்ந்தமருது அல்—ஹிலால் வித்தியாலய அதிபர், ஆசிரியர்களுக்கு தேசிய விருது

உலக ஆசிரியர் தினத்திற்கு இணைவாக கல்வி அமைச்சால் ஏற்பாடு செய்யப்படும், ஆசிரியர் மற்றும் அதிபர்களை பாராட்டும் வைபவத்தில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய அதிபர், பிரதி அதிபர் உட்பட இரண்டு ஆசிரியர்களுக்கு 'குரு பிரதீபா பிரபா - 2023' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதிபர் யூ.எல்.நஸார், பிரதி அதிபர் ஏ.பி. ஹோன் டில்றாஸ், ஆசிரியர்களான ஏ.எல்.எம்.இர்ாத், கே.எல்.ஏ.ஜஃபர் ஆகியோரே இவ்வாறு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு, கல்வியமைச்சின் முகாமைத்துவம் மற்றும் தர உறுதிப்பாட்டுக் கிளை ஏற்பாட்டில் இசுருபாய பத்தரமுல்லயில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாகாண ரீதியில் நடைபெற்ற தரப்படுத்தலிலும், பல்வேறு முன்னுதாரணமான செயற்பாடுகளுக்கு மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் ஏற்கனவே சான்றிதழ் வழங்கப்பட்ட இப்பாடசாலை, பல்வேறு அடைவுகளை எட்டி தேசிய ரீதியான இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவிற்கு தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 27 பாடசாலைகளில் இரண்டு முஸ்லிம் பாடசாலைகள் மட்டுமே அடங்குகின்றன. அதில், வட மாகாணத்தில் இருந்து ஒரு பாடசாலையும், கிழக்கு மாகாணத்தில் இருந்து அல்-ஹிலால் வித்தியாலயம் மட்டும் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இதனூடாக கல்முனை கல்வி வலயத்தில் இருந்து சிறந்த பயிற்சிக்கான தேசிய அளவிலான முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களின் மதிப்பீடு என்ற மதிப்பீட்டின் பிரகாரம் இந்த விருதை இப்பாடசாலை பெற்றுக் கொண்டுள்ளது.

விருது பெற்ற அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு பாடசாலை சமூகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளன. (05)




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SEARCH NEAR VEHICLES
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# மிஸ் தமிழ் யுனிவர்ஸ் மகுடத்தை வென்ற மலையகத் தமிழ் பெண்





கனடாவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்காக தமிழ் அழகிகள் போட்டியில் மலையகத்தை பூர்வீகமாக கொண்ட செல்வி மலிஷா மாணிக்கம் சிறந்த அழகியாக மகுடம் சூடினார்.

கனடாவில் இயங்கிவரும் 'மிஸ் தமிழ் யுனிவர்ஸ்' அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட இந்த அழகிப் போட்டி ரொரன்டா நகரில் அமைந்துள்ள ஸ்காப்ரோ மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# ஆளுநர் சாள்ஸுக்காகக் காத்திருந்த யாழ். இந்திய துணை தூதரக நிகழ்வு

## 40 நிமிடங்கள் தாமதித்து வந்தார்





யாழ். இந்தியத் துணைத் தூதரகம் ஏற்பாடு செய்த இந்திய பொருளாதார ஒத்துழைப்பு தின நிகழ்வுக்காக வட மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் அழைக்கப்பட்டிருந்தார்.

யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்வு 12 மணிக்கு ஆரம்பிக்கும் என ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் வடமாகாண ஆளுநர் 12.40 தாண்டியும் குறித்த நிகழ்வுக்கு வருகை தரவில்லை.

நிகழ்வை ஏற்பாடு செய்த யாழ். இந்தியத் துணைத் தூதரகம் ஆளுநர் வருகை தாமதமாகவும் அதற்கு வருத்தம் தெரிவிப்பதாக ஒலி பெருக்கி யில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் பொறுமை இழந்த தூதரக உத்தியோகத்தர்கள் 12.40 மணிக்குப் பின்னர் ஆளுநர் வருகையை பாராது நிகழ்வை ஆரம்பித்தனர்.

ஏற்கனவே யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் வடமாகாண ஆளுநர் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட நிலையில் குறித்த நிகழ்வில் ஆளுநர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# காரைதீவு கண்ணகி வித்தியாலயத்தின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்








கல்முனை கல்வி வலய காரைதீவு கமு/கமு/கண்ணகி வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் என். திருக்குமார் தலைமையில் இன்று (சனிக்கிழமை) காலை பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதி பங்களிப்போடும், ஆதரவோடும் 66 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் அதி கஸ்டத்திலுள்ள 26 மாணவர்களுக்கு புத்தகப்பைகள் மற்றும் பாதணிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும், பிரதம பொலிஸ் பரிசோதகருமான கே. டீ. எஸ்.ஜெயலத் கலந்துகொண்டார். மேலும் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி மிதுலா மணிமாறன், ஆசிரியர்களான எஸ். உதயநாதன், எஸ். பாஸ்கரன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஏழை மாணவர்களின் கல்விக்கு தொடர்ந்தும் உதவிக்கரம் நீட்டி வரும் இணைந்த கரங்கள் இணைப்பாளர்களான லோ. கஜரூபன், சி.காந்தன், ந.சனாதனன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சாய்ந்தமருது ஜீ.எம்.எம். பாடசாலையின் ஆசிரியர்தின நிகழ்வுகள் சிறப்புற நடந்தன

கமு/கமு/ஜீ.எம்.எம்.பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வுகள் மிகவும் கோலாகலமாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

இதன்போது பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ், பிரதி அதிபர் திருமதி குறைஷியா ராபிக், உதவி அதிபர் எம்.ஏ.சி.எல்.நஜீம் மற்றும் பகுதித் தலைவர்கள் உள்ளீட்ட ஆசிரியர்கள், மாணவர்களால் அழைத்துவரப்பட்டு மாலை அணிவித்து; பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவாலும் மாணவர்களாலும் மகத்தான கௌரவம் அளிக்கப்பட்டதோடு ஆசிரியர் தின நினைவு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், உறுப்பினர்களான இசட்.ஏ. அஸ்மீர், எம்.ஏ.சி. ஹஸீர் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லாதவாறு இவ்வாசிரியர் தின நிகழ்வுகள் நடைபெற்றமை விசேட அம்சமாகும்.

மேலும் இவ்வருட புலமைப் பரிசில் பரீட்சை முடிவடைந்த பின்னர் பிரமாண்டமான முறையில் ஆசிரியர் தின நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு சில தினங்களுக்கு முன்னர் குறித்த பாடசாலையின் அதிபர் இல்லியாஸ், ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மாணவர்கள் அன்பளிப்புகள் எதனையும் கொண்டுவரக்கூடாது என அதிரடி அறிவிப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சீனாவினால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் வழங்கல்

இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு உதவி அடிப்படையில் சீனாவால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெயை கடந்த 2 ஆம் திகதி முதல் நாடெங்கும் விநோயோகித்து வருவதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

15 கடற்றொழில் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட, கடற்றொழிலில் ஈடுபடும் 29 ஆயிரத்து 57 மீன் பிடி படகுகளுக்கு இவ்வாறு மண்ணெண்ணெய் விநியோகிக்கபட்டடு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# உலக குடியிருப்பு தினம் மன்னாரில் முன்னெடுப்பு











உலக குடியிருப்பு வாரம் கடந்த 02 ஆம் திகதி தொடக்கம் 09 ஆம் திகதி வரை தேசிய ரீதியில் நெகிழ்வான நகர்ப்புற பொருளாதாரம் எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படுகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பங்களிப்புடன் பல்வேறு செயல்பாடுகளை அமுல்படுத்தி இத்தினம் கொண்டாடப்படுகிறது.

மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடந்த 02 ஆம் திகதி திங்கள் காலை தேசிய கொடி ஏற்றி உலக குடியிருப்பு வார நிகழ்வுகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் மன்னார் ஜிம் பிறவுண் இந்தியன் வீட்டுத்திட்டம் மற்றும் பற்றிமா நகர் 1 மற்றும் பற்றிமா நகர் 11 இந்தியன் வீட்டுத் திட்டங்களில் சிரமதானம், மரநடுகை மற்றும் போதைவஸ்து விழிப்புணர்வு கருத்தமர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தங்களது பிள்ளைகளுக்காக வீடமைத்த பெற்றோர் இன்று வயோதிப இல்லங்களில் வசித்து வருகிறார்கள்.

மன்னார் பட்டித்தோட்டம் வயோதிப இல்லத்தில் வாழும் மூத்தோரை சந்தித்து அவர்களை மகிழ்ச்சிப் படுத்தி அவர்களுக்கு சிற்றுண்டி வழங்கும் நிகழ்வும் இவ்வாரத்தில் சிறப்புற நிகழ்ந்தது.

தொடர்ந்து வரும் நாள்களில் கடந்த 2021 மற்றும் 2022 இல் ஆரம்பிக்கப்பட்ட 'ஒபட்ட கியக் ரட்டட்ட ஹெட்டக்' மானிய வீடமைப்பு வேலைத் திட்டத்துக்கான மிகுதி கொடுப்பனவுகள் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2023இல் வெளியிடப்பெற்றது.